# DEPOSITION OF WITNESS
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**STC.No.186/2020**

**2026-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30- ம் நாள் வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 01-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 01 | தொழில் | - | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| பெயர் | - | உதயசூரியன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | நாகமுத்து | சமயம் | - | |
| கிராமம் | - | 6/200 ரொட்டிக்கடை | வயது | - | 64/2026 |
| சாதி | - | | | | |

<u>**30.01.2026**</u>

**( எதிரி ஆஜரில்லை)**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

(எதிரி தரப்பில் தாக்கல் செய்த குவிமுச.பிரிவு 311-ன் கீழான மனுன E-Crl.M.P.No.888/2025 -ல் அனுமதிக்ப்கபட்டு சாட்சி திரும்ப அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்)

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. நான் இவ்வழக்கு சம்பவதினத்தன்று எந்த காவல் நிலையத்தில் பணியில் இருந்தேன் என்றால் வால்பாறை காவல் நிலையத்தில் பொறுப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தேன். அன்றைய தினம் நான் வால்பாறை காவல் நிலைய பொறுப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்ததற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தொலைபேசி மூலம் கிடைத்த வாய்மொழி உத்தரவின் படி பொறுப்பு பணியில் இருந்தேன். 23.02.2020-ம் தேதி வெள்ளைச்சாமி என்பவர் எத்தனை மணிக்கு புகார் கொடுக்க வந்தார் என்றால் காலை 09.00 மணியளவில் வந்தார். நான் சம்பவயிடம் எத்தனை மணிக்கு சேர்ந்தேன் என்றால் 09.30 மணியளவில் சம்பவயிடம் சென்று சாட்சிகளை விசாரித்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து திரும்ப 11.30 மணிக்கு காவல் நிலையம் வந்தேன். நான் திரும்ப காவல் நிலையம் வந்த

போது எதிரி பிரபு காவல் நிலையத்தில் இல்லை என்றால் இருந்தார். நான் காவல் நிலையத்திலிருந்து சம்பவயிடம் புறப்பட்ட போது பிரபு காவல் நிலையத்தில் இல்லை. திரும்ப வந்தபோது காவல் நிலையத்தில் இருந்தார். போலீசார் விசாரணையில் நான் மேற்படி வெள்ளைச்சாமியிடம் புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் போது, எதிரி பிரபு காவல் நிலையத்திற்கு வெளியே நின்றிருந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரி மீது புகார் எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்றால் காலை 11.50 மணிக்கு புகார் கொடுத்தேன். புகார் கைப்பட எழுதிக்கொடுத்தேனா என்றால் ஆமாம். நான் மருத்துவமனைக்கு எப்போது சென்றேன் என்றால் புகார் கொடுத்துவிட்டு மருத்துவமனை சென்றேன். சரியாக நினைவில் இல்லை. நான் காவல் உதவி ஆய்வாளராக எத்தனை வருடங்களாக பணிபுரிந்தேன் என்றால் 9 வருடங்களாக பணிபுரிந்துள்ளேன். வால்பாறை காவல் நிலையத்தில் எப்போதும் பொது மக்கள் கூட்டம் இருக்கும் என்றால் சில நேரங்களில் இருக்கும், சில நேரங்களில் இருக்காது. வெள்ளைச்சாமி கொடுத்த புகாரை பெற்று காவல் நிலையத்தில் விசாரணை செய்த போது, காவல் நிலையத்தில் யார் யார் இருந்தது என்றால் கலைவாணி என்ற போலீஸ் இருந்தார். SP கான்ஸ்டேபிள் ஒருத்தரும், சுரேஷ் என்ற போலீஸ்ம் இருந்தார்கள். புகார் கொடுத்த வெள்ளைச்சாமியும் அவருடன் ஒருவரும் இருந்தார். அவர் யார் என்று எனக்கு தற்போது ஞாபகமில்லை. எதிரி பிரபு என்னை அசிங்கமான வார்த்தைகளால் பேசியதாக புகாரிலோ, சாட்சியத்திலோ நான் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் சீருடையில் பணியில் இருந்த போது, பணி செய்யவிடாமல் எதிரி தடுத்ததாக நான் சாட்சியத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். பொதுவாக ஒரு நபர் கொலை மிரட்டல் விடுத்தால் உடனடியாக அவர் மீது புகார் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். 23.02.2020-ம் தேதி எதிரி நடத்தி வரும் கறிக்கடையில் ஏற்பட்ட பிரச்சனை சம்பந்தமான அன்றைய தினம் புகார் கொடுப்பதற்காக எதிரி காவல் நிலையம் வந்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. உண்மையிலேயே புகார் கொடுக்க வந்த எதிரியை நான் நீ வெளியே போடா என்று சொல்லி நானாகவே கீழே விழுந்துவிட்டதால் எதிரி என்னை தூக்கிவிட்டார் என்றால் சரியல்ல. எதிரியை எப்போது கைது செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் எதிரி மீது தவறாக புகார் கொடுத்ததால் அதன் பேரில் காவல்துறையை சார்ந்தவர்கள் எதிரியை அவர் வேலை செய்து கொண்டிருந்த பெட்ரோல் பங்கில் வந்து அழைத்து சென்று காடம்பாறை காவல் நிலையத்தில் வைத்து அடித்து, காயத்தை ஏற்படுத்தியுள்ளார்கள் என்றால் சரியல்ல. அதற்கு பின்பு தான் இந்த வழக்கில் எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பியுள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரி நான் சொன்னது போல என்னை அசிங்கமாக பேசவோ, அடிக்கவோ, கொலை மிரட்டல்விடுக்கவோ இல்லை என்றால் சரியல்ல. நான் எதிரி மீது தவறாக புகார் கொடுத்து, தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம். திருமதி.என்.மீனாட்சி, B.A., B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.